மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.396/2015</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 16ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலுச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.02.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ராமசாமி கவுண்டர் எனக்கு என்ன முறை என்றால் எனது தாத்தா. மேற்படியாருக்கு ராமாத்தாள், குமாரசாமி கவுண்டர், நாச்சப்ப கவுண்டர் மற்றும் பெரியம்மாள் ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்களில் ராமாத்தாள் என்பவரின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் இரண்டு வாதிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான் ராமாத்தாள் இறந்தார் என்றால் சரிதான். ராமாத்தாள் தன்னுடைய தகப்பனாரின் பூர்வீக சொத்தில் 4ல் 1 பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு. எங்கள் மீது ராமாத்தாள் எதற்கு வழக்கு போட்டார் என்றால் தனக்கு பங்கு வேண்டும் என்று வழக்கை போட்டு உள்ளார்.

2. பூர்வீக சொத்துக்களை பொறுத்து குமாரசாமி கவுண்டர் மற்றும் நாச்சப்பகவுண்டர் ஆகியோர்கள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால்

சரிதான். அந்த பாகப்பிரிவினை எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் 2008 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் என் வசம் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின் இரண்டாவது பத்தியில் நாம் இருவரும் சகோதரர்கள் நமது தகப்பனாரான ராமசாமி கவுண்டருக்கு கீழ்க்கண்ட சொத்துக்கள் பிதுராஜிர்த வகையில் பாத்தியப்பட்டது என்ற வாசகங்கள் கண்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி 2008 பாகப்பிரிவினை ஆவணத்திற்கு பின்னிட்டு நாங்கள் எதுவும் பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல பாகம் செய்து கொண்டுள்ளோம். எந்த ஆண்டு செய்து கொண்டோம் என்றால் 2012 ஆம் ஆண்டு யார் யார் பாகம் செய்து கொண்டோம் என்றால் என் தகப்பனார் எனது பெயருக்கு 08.10.2012 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி என் தகப்பனார் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் க.ச.எண்கள்.2 ல் மொத்தம் புஞ்சை ஏக்கர் 3.19 மட்டும் எனக்கு பாத்தியப்பட்டு உள்ளது என்றால் சரிதான்.

4. எனக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேட்டுப்பாளையம் கிராமத்தில் உள்ள வீடுகளை பொறுத்தும் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் மேட்டுப்பாளையம் கிராமத்தில் எங்களுக்கு வீடுகள் இல்லை தோட்டத்தில் உள்ள வீடுகளை பொறுத்து எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் மேட்டுப்பாளையம் கிராமத்தில் எங்களுக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்று சொல்கிறேனா என்றால் அங்கு எங்களுக்கு தோட்டம் உள்ளது.

5. மேட்டுப்பாளையம் கிராமத்தில் எங்களுக்கு வீடுகள் எதுவும் இல்லை மேட்டுப்பாளையம் கிராமத்தில் எனக்கு வீடுகள் இருந்து அதற்கு நான் வரிகள் ஏதேனும் செலுத்தி இருந்தால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் சாமியாத்தாள், கிட்டாத்தாள் மற்றும் சரஸ்வதி. சரஸ்வதி என்பவரிடமிருந்து நான் ஒரு விடுதலை பத்திரம் எழுதி வாங்கி உள்ளேன் என்றால் இரண்டு சகோதரிகளிடம் இருந்து நான் விடுதலை பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன். பூர்வீக சொத்துக்களில் எனது சகோதரிகளுக்கும் பாகம் உள்ளதால் எதிர்காலத்தில் பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக நான் என் சகோதரியிடம் மேற்படி விடுதலை பத்திரத்தை எழுதி வாங்கினேன் என்றால் இல்லை. பூர்வீக சொத்துக்கள் என் தகப்பனார் காலத்தோடு முடிந்துவிட்டது. நான் என் சகோதரரிகளிடம் இருந்து எழுதி பெற்ற விடுதலை ஆவணத்தில் எனக்கும் என் தகப்பனாருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொருத்துதான் மேற்படி விடுதலை பத்திரம் எழுதி பெறப்பட்டது என்றால் சரிதான்.

6. என் அப்பா எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்த சொத்துக்கள் தவிர எங்களுக்கு மீதி பூமிகள் இருந்தது என்றால் ஆமாம். அந்த மீத சொத்துக்களை பொறுத்துதான் காங்கேயம், சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.232/2020 என்ற வழக்கை ஒரு பழனிச்சாமி என்பவர் மீது தாக்கல் செய்து பாகம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த பழனிச்சாமி யார் என்றால் என் சகோதரி கிட்டாத்தாள் என்பவரின் கணவர். கிட்டாத்தாள் மற்றும் சாமியாத்தாள் ஆகியவர்களிடமிருந்துநான் விடுதலை ஆவணத்தை

எழுதி வாங்கிய பின் எதற்காக அசல் வழக்கு எண்.232/2020 வழக்கில் கிட்டாத்தாள் என்பவரின் கணவர் பழனிச்சாமி என் மீது வழக்கு தொடர்ந்தார் என்றால் பூர்வீக சொத்துக்களை பொறுத்து அவர் அந்த வழக்கை தொடர்ந்தார் அது சரிதான்.

7. மேற்படி வழக்கு சமாதானமாக முடிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் பழனிச்சாமி என்பவருக்கு என்பவருக்கு எந்த சொத்துக்களையும் ஒதுக்கீடு செய்யவில்லை என்றால் அவர் கிட்டாத்தாளின் சொத்தை எனக்கு கொடுத்துவிட்டு போய்விட்டார். உண்மையில் 2, 3 வாதிகளையும் தரப்பினராக சேர்த்து தான் நாங்கள் பாகம் செய்த கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் கிட்டாத்தாளின் கணவர் பழனிச்சாமி என்பவரை தரப்பினராக சேர்த்து மீதமுள்ள சொத்துக்களை பொறுத்து நாங்கள் எங்களுக்குள் பாகம் செய்து கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

8. நாங்கள் அசல் வழக்கு எண்.320/2022 வழக்கில் செய்து கொண்ட பாகப்பிரிவினையில் ராசாத்தாவலசு கிராமம் சேமலை கவுண்டன் வலசு ஊர்க்கட்டு நத்தம் க.ச.எண்.267ல் கட்டப்பட்டுள்ள வீடு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதே ஊரில் எங்களுக்கு ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இன்னொரு வீடு உள்ளது என்றால் ஒரே வீடு தான் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஊர்கட்டில் உள்ள வீடுகளுக்கு உண்டான மின் கட்டண மற்றும் குடிநீர் கட்டண ரசீதுகளை தான் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

9. பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஒரே தேதியில் ஒரே நபரிடம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. இட்டேரி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட மனவருத்தத்தின் காரணமாக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக நான் சொல்வது உண்மை அல்ல என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு தான் இட்டேரி பிரச்சனை குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு ஆதரவாக எனது பெயரிலான தாவா சொத்துக்களை பொருத்த பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நான் பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களான மின் கட்டண ரசீதுகள் அனைத்தும் இந்த வழக்கிற்காக என்னால் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள பி.வா.சா.ஆ.15 ரசீதுகள் சேமலை கவுண்டன் வலசு ஊர்க்கட்டில் உள்ள வீட்டை பொருத்து ஏற்பட்ட ரசீதுகள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ரசீதுகள் தோட்டத்தில் உள்ள வீட்டுக்கான ரசீதுகள் அதன் ரசீது எண் 113. பி.வா.சா.ஆ.14 மற்றும் பி.வா.சா.ஆ.16 ஆகிய ரசீதுகள் சேமலை கவுண்டன் வலசு நத்தம் ஊர் கட்டில் உள்ள வீட்டின்மின் கட்டண மற்றும் சொத்துவரி வீட்டு வரி ரசீதுகள் என்று

சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் முழுமையாக அனுபவம் செய்து வருகிறேன் என்பதை பொறுத்து நான் எனது பெயரில் ஆன பட்டா உட்பட வேறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. பொய்யான நபர் மீது ஒரு வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்து அதில் சமரசமாக முடித்து தாவா சொத்துக்களை முழுவதும் நான் எனது பெயரில் மாற்றிக் கொண்டது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என்னால் இந்த வழக்கில் எனது பெயரிலான பட்டாவை தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி வாதிகளுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை பொறுத்து 12 ல் ஒரு பங்கு பாகம் சிந்திக்கிறது என்றும் நான் அந்த அவர்கள் பாகத்தை கொடுக்க மறுத்ததால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

12. தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்தின் பூர்வீக சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்கள் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து நாங்கள் ஏற்படுத்தி கொடுத்த எந்த ஆவணங்களும் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டவை என்றும் அதனால் அந்த ஆவணங்கள் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் தங்களுக்கு தாவா சொத்துக்களில் சேர வேண்டிய 12 ல் ஒரு பங்கை

பெற தகுதியான நபர்கள் என்றும் அதை நாங்கள் எந்த விதத்திலும் மறுக்க இயலாது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.16 18:56:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்